# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

**முறையீட்டு மனு எண்: 012 மற்றும் 036/2019/பே**
**ஆணை நாள் . 19 –06–2019**

திருமதி . E. சாந்தி,
க/பெ திரு.இசக்கியப்பன்,
4/52, பஞ்சலிங்கபுரம்,
மகாதானபுரம் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம். -- முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
கன்னியாகுமரி பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம். -- எதிர் மனுதாரர்.

**ஆணை.**

கன்னியாகுமரி மாவட்டம், 4/52, பஞ்சலிங்கபுரம் பகுதியினைச் சேர்ந்த திருமதி.இ.சாந்தி என்பவரது 22.01.2019 மற்றும் 04.03.2019 நாளிட்ட முறையீட்டு மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் முறையே 25.01.2019 மற்றும் 06.03.2019 ஆகிய தேதிகளில் பெறப்பட்டு முறையீட்டு மனு எண் 012/2019 மற்றும் 036/2019 என எண்ணிடப்பட்டது மேற்படி முறையீட்டு மனுக்கள் மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுக்களில் தான் கன்னியாகுமரி பேரூராட்சியில் தனது பெயரை ஒப்பந்தக்காரராக பதிவு செய்துள்ளதாகவும், 2017–2018 மற்றும் 2018–19–ஆம் ஆண்டிற்கு தனது ஒப்பந்தக்காரர் உரிமைத்தினை புதுப்பித்துள்ளதாகவும், ஆனால் பேரூராட்சியில் கடந்த 2 வருடம் 4 மாதமாக எவ்வித பணிகளும் செய்யவில்லை எனவும், மேற்படி பேரூராட்சியில் பதிவு செய்த பல ஒப்பந்தக்காரர்கள் பணிகளை மேற்கொள்வதாகவும், பேரூராட்சி செயல் அலுவலர் கையூட்டு பெற்றுக் கொண்டு பணிகளை ஒப்படைப்பதாகவும், மேலும் தனக்கு பல்வேறு நிதிகளின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகளுக்கான ஒப்பந்தபுள்ளி அறிவிப்புகள் பேரூராட்சி மூலம் அனுப்பவில்லை எனவும், 11.02.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் கனிமம் மற்றும் சுரங்க நிதி 2015–16ல் மாதவபுரம் பிள்ளையார் கோவில் தெரு சிமெண்ட் சாலைப் பணிக்கு தான் ஒப்பந்தப்புள்ளி

வழங்கியதாகவும், தனது ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப ரீதியாக தகுதியில்லை என ரத்து செய்யப்பட்டதாகவும், ஆனால் தான் அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பித்துள்ள நிலையில் பேரூராட்சி செயல் அலுவலர் கையூட்டு பெற்றுக் கொண்டு தனது ஒப்பந்தப்புள்ளியினை தகுதி நீக்கம் செய்ததாக தெரிவித்து விசாரணை கோரி தனது முறையீட்டு மனுக்களை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

18.02.2019 நாளிட்ட கன்னியாகுமரி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையில் கன்னியாகுமரி சிறப்பு நிலை பேரூராட்சியில் 2017–2018–ஆம் ஆண்டு நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.50.00 லட்சம் மதிப்பீட்டில் பாலசுப்பிரமணியபுரத்தில் கருந்தளம் அமைக்கும் பணியும், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மாதவபுரம் விநாயகர் கோவில் தெருவில் உயர் கோபுர மின் விளக்கு பணி ரூ.2.00 லட்சம் மதிப்பீட்டிலும், 2018–19ம் ஆண்டில் 14–வது நிதிக்குழு திட்டத்தில் லூர்துமாதா தெருவில் ரூ.20.00 லட்சம் மதிப்பீட்டில் கருந்தளம் அமைக்கும் பணி மற்றும் சின்ன முட்டம் விடிவெள்ளி தெருவில் கருந்தளம் அமைக்கும் பணிகளை மேற்கொண்டதாகவும், மேற்காணும் பணிகளுக்கு முறையாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிக்கான விளம்பரங்கள் ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் அனுப்பி வைக்க அறிவிப்பு வழங்கப்பட்டு, ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த நிரக்கிற்கு ஒப்பந்தப் பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வந்துள்ளதாகவும், முறையீட்டு மனுதாரர் திருமதி சாந்தி, க/பெ திரு.இசக்கியப்பன், மகாதானபுரம் அஞ்சல் என்பவருக்கும் அவ்வப்போது ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து அவ்வாறு அனுப்பப்பட்டமைக்கான அனுப்புகை பதிவேட்டில் பதிவு செய்த விவரங்களின் ஒளி நகலினை இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

மேலும், கனிமம் மற்றும் சுரங்கம் நிதி 2015–16 திட்டப் பணிக்கு மனுதாரருக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்டு பெறப்பட்ட ஒப்புகை அட்டையின் நகலினையும் தனது அறிக்கையுடன் கன்னியாகுமரி பேரூராட்சி செயல் அலுவலர் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

26.02.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையில் மேற்படி பொருள் தொடர்பான 19.03.2019 நாளிட்ட விசாரணைக்கு இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகத் தெரிவித்து கன்னியாகுமரி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர்களுக்கு ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரரின் 12.03.2019 நாளிட்ட கடிதத்தில் சொந்த வேலை காரணமாக தான் இராமேஸ்வரம் செல்வதாகவும், மேற்படி விசாரணையினை மற்றொரு தேதிக்கு மாற்றிக் கொடுக்கக் கோரியிருந்தார்.

19.03.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான கன்னியாகுமரி பேரூராட்சி செயல் அலுவலர் திரு.மு.வெங்கடேஸ்வரன் தனது வாக்குமூலத்தில் 16.02.2019 நாளிட்ட டெண்டரில் மூன்று ஒப்பந்தக்காரர்கள் கலந்து கொண்டதாகவும், அதில் மனுதாரர் திருமதி.இ.சாந்தியும் கலந்து கொண்டதாகவும், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் தெரிவித்துள்ள சில தகுதிகள் அவரது ஒப்பந்தப்புள்ளியில் இல்லாததால் அவருடைய ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப ரீதியாக தகுதியில்லை என்பதால் அவருக்கு பணி வழங்கப்படவில்லை எனவும், எனவே விதிகளின்படி தகுதியுள்ள ஒப்பந்தக்காரருக்கு மட்டும் பணி ஒப்படைக்கப்படுவதாகவும், அனைவருக்கும் அறிவிப்புகள் முறையாக அனுப்பப்பட்டு வருவதாகவும், தவறுகள் மற்றும் விதி மீறல்கள் ஏதும் நடைபெறவில்லை எனவும், முறையீட்டு மனுதாரர் தனக்கு எப்படியாவது பேரூராட்சிகளின் பணிகளை வழங்கினால் தனது மனுவினை வாபஸ் வாங்குவதாக தெரிவித்ததாகவும் தனது வாக்குமூலத்தில் கன்னியாகுமரி பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

மேலும் கன்னியாகுமரி பேரூராட்சி செயல் அலுவலர் விசாரணையின்போது சமர்ப்பித்த 18.03.2019 நாளிட்ட அறிக்கையில் மேற்படி முறையீட்டு மனுதாரர், கன்னியாகுமரி பேரூராட்சியில் 2016–17–ஆம் ஆண்டு ஒப்பந்தக்காரராக பதிவு செய்துள்ளதாகவும், மேற்படி ஒப்பந்தக்காரருக்கு

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தவறுதலாக அனுப்பாமல் இருந்துள்ளதாகவும், இது தொடர்பாக முறையீட்டு மனுதாரர் ஒரு முறைகூட நேரிலோ, தொலைபேசி மூலமாகவோ செயல் அலுவலரின் கவனத்திற்கு கொண்டு வரவில்லை எனவும், அவ்வாறு கொண்டு வந்திருக்கும் பட்சத்தில் இக்குறைபாடு அப்போதே சரி செய்யப்பட்டிருக்கும் எனவும் தெரிவித்துள்ளார். மேலும் முறையீட்டு மனுதாரர் இதே புகாரினை 10.12.2018 அன்று நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அது விவரம் செயல் அலுவலருக்கு 12.01.2019 அன்று தெரியவந்ததாகவும், இதனைத் தொடர்ந்து 19.01.2019 நாளிட்ட ந.க.எண். 30/2019/அ.1க்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு முறையீட்டு மனுதாரருக்கு முறையாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரரின் பெயர் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களின் பெயர் பட்டியலில் விடுபட்டுள்ள விவரம் பேரூராட்சி செயல் அலுவலரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட பின்னர், நடைபெற்ற அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளின் அழைப்பாணைகளும் முறையீட்டு மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த காலங்களில் முறையீட்டு மனுதாரருக்கு ஒப்பந்தப்புள்ளி அழைப்பாணைகள் கிடைக்கப்பெறாதது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல எனவும், தவறுதலான இப்பிழைக்கு தனது வருத்தத்தை தெரிவித்துக் கொள்வதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதுடன் இனி வருங்காலங்களில் முறையீட்டு மனுதாரருக்கு அனைத்து ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளும் அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் 12.03.2019 நாளிட்ட கடிதத்தினை ஏற்று மேற்படி பொருள் தொடர்பான மறு விசாரணை 25.04.2019 அன்று நடைபெறுவதாக தெரிவித்து மேற்படி விசாரணைக்கு ஆஜராகி தனது தரப்பிலான விளக்கங்களை பதிவு செய்ய அழைப்பாணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் 25.04.2019 தேதிய விசாரணைக்கு ஆஜராகாததோடல்லாமல் ஆஜராகாமைக்கான எவ்வித விளக்கத்தினையும் சமர்ப்பிக்கவில்லை.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனுக்கள், கன்னியாகுமரி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் மற்றும் வாக்குமூலத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட கூடுதல் அறிக்கை ஆகியன பரிசீலிக்கப்பட்டன. கன்னியாகுமரி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில் மேற்படி பேரூராட்சியில் நடைபெறும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கான அறிவிப்பு பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்தும், ஒப்பந்தக்காரர்களுக்கு பேரூராட்சியால் தபால் மூலம் அனுப்பி வைத்தமைக்கான அனுப்புகை பதிவேட்டின் ஒளி நகலுடன் விவரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 16.02.2019 நாளிட்ட ஒப்பந்தப்புள்ளியில் முறையீட்டு மனுதாரரும் கலந்து கொண்டதாகவும், அவரின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெறாததால் அவருக்கு பணி கிடைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனு தொடர்பாக தனது விளக்கங்களை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகத் தெரிவித்து அழைப்பாணை அனுப்பிய நிலையில் அவரின் கோரிக்கையின்படி மறு விசாரணைக்கும் தேதி நிர்ணயம் செய்து அழைப்பாணை அனுப்பியும் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகாததோடல்லாமல் அதற்கான எந்த விளக்கத்தினையும் சமர்ப்பிக்கவில்லை. இதன்மூலம் இப்பொருள் தொடர்பாக முறையீட்டு மனுதாரருக்கு கூறிக் கொள்ள முகாந்திரம் ஏதுமில்லை என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

இருப்பினும் கன்னியாகுமரி பேரூராட்சி செயல் அலுவலரின் 18.03.2019 நாளிட்ட அறிக்கையில் முறையீட்டு மனுதாரரின் பெயர் ஒப்பந்தக்காரர் பெயர் பட்டியலில் விடுபட்டிருந்ததால் சில ஒப்பந்தப்புள்ளி அழைப்பாணைகள் தவறுதலாக அனுப்பாமல் விடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள விவரம் ஏற்புடையதாக இல்லை. ஒப்பந்தக்காரராக பதிவு செய்தவுடன் உரிய பேரூராட்சி அனுமதி எண்ணுடன் அதற்கான பேரூராட்சி அளவிலான ஒப்பந்தக்காரர் பதிவேடு (Register of Contractors) என்ற பதிவேட்டில் உரிய முகவரியுடன் எழுதி வைத்து அதன் அடிப்படையில் பேரூராட்சியில் நடைபெறும் ஒப்பந்தப்புள்ளிகள் மேற்படி பதிவேட்டில் உள்ள நபர்களுக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். இந்நேர்வில் உரிய நடைமுறைகள் கடைபிடிக்கப்படவில்லை என்பது

உறுதியாகிறது. எனவே மேற்படி தவறுகளுக்கு பொறுப்பானவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு பரிந்துரைத்து ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

26/6/19

பெறுநர்

1.திருமதி . இ. சாந்தி,
க/பெ திரு.இசக்கியப்பன்,
4/52, பஞ்சலிங்கபுரம்,
மகாதானபுரம் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
கன்னியாகுமரி சிறப்பு நிலை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
நாகர்கோவில் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாகர்கோவில்.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலின் தனி எழுத்தர்
உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள்) தகவலுக்காக.